DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 192/2026

Miscellaneous :

Sessions : PW –1

Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | முகமது ஷெரிப் |
| Father / Husband Name | அப்துல்முனாப் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 18. 06.2026

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது மேலவளம்பேட்டையில் வசித்து தனியார் தொழில் செய்து வருகிறேன். இந்த வழக்கு விபத்து சம்பவத்தில் இறந்து போன மெகருன்பி என் தாயார். 10.11.2025 மதியம் 03.00 மணியளவில் என் அம்மாவும் அப்பாவும் மேலவளத்திலிருந்து என்னுடைய அண்ணன் Bajaj பிளாட்டினா TN 19 BS 7492 என்ற எண் கொண்ட இருசக்கர வாகனத்தில் மதுராந்தகம் மார்க்கெட்டிற்கு சென்றார்கள். அப்போது கருங்குழி பெட்ரோல் பங்க் எதிரில் உள்ள ஆலடிப்பட்டியான் காபி கடைக்கு அருகே செல்லும் போது சென்னையில் இருந்து திருச்சி நோக்கி சென்ற ஸ்கார்பியோ காரை அதன் ஓட்டுநர் அதிவேகமாக ஓட்டி வந்து என் அப்பா ஓட்டி சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதியதில் என் அம்மா முன் பக்கம் விழுந்து இறந்துவிட்டார். என் அப்பாவிற்கு தலையிலும், கை கால்களிலும் அடிப்பட்டுவிட்டது.

2.என் அப்பாவின் வலது காலில் எலும்பு முறிவு ஏற்பட்டது. மேற்படி தகவல் தெரிந்து நான் சம்பவயிடத்திற்கு சென்று பார்த்தேன். பின்னர் உடனடியாக 108 ஆம்புலன்ஸ் மூலம் என் அப்பாவை செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கும் என் அம்மாவை மதுராந்தகம் அரசு மருத்துவமனை சவகிடங்கிற்கும் அனுப்பி வைத்தேன். இது தொடர்பாக நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகாரை நான்தான் கொடுத்தேன். **(அந்த புகார் அசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

3. விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். புகாரை யார் எழுதினார் என்றால் என்ன நடந்தது என்று நான் சொன்னேன் என்னுடைய வழக்கறிஞர் எழுதினார். வழக்கறிஞர் எழுதிய புகாரில் நான் கையொப்பம் மட்டும் செய்தேன் என்றால் சரிதான். புகாரில் நான் ஏதாவது திருத்தமோ இடைசொறுகலோ செய்தேனா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் புகாரில் திருத்தம்

செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். பட்டியல் சாட்சி 3 முதல் 5 மற்றும் 7 ஆகியோர் என்னுடைய உறவினர்கள் மற்றும் நண்பர்கள் பட்டியல் சாட்சி 6 யார் என்று எனக்கு தெரியவில்லை. வழக்கில் இறந்து போன என் அம்மாவிற்கு இழப்பீடு பெற வேண்டும் என்பதற்காக பொய்யான புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 192/2026

Miscellaneous :

Sessions : PW -2

Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | அப்துல்முனாப் |
| Father / Husband Name | முகம்மது யூசப் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 18. 06.2026

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது கருங்குழியில் வசித்து வருகிறேன். 10.11.2025 ம் தேதி மாலை 03.00 மணியளவில் நானும் என் மனைவியும் Bajaj platina இருசக்கர வாகனத்தில் கருங்குழியில் இருந்து மதுராந்தகம் வரும் போது கருங்குழி பெட்ரோல் பங்க் எதிரே உள்ள காபி கடை அருகே செல்லும் போது, எங்களுக்கு பின்னால் சென்னையிலிருந்து திண்டிவனம் நோக்கி சென்ற வெள்ளை நிற கார் என்னுடைய இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தியது. வண்டி இடித்ததும் நான் பக்கவாட்டில் விழுந்துவிட்டேன். என்னுடைய மனைவி முன்னால் விழுந்துவிட்டார். நாங்கள் விழுந்ததை பார்த்தும் ஆஜர் எதிரி எங்களை வந்து பார்த்தார். மேற்படி விபத்தில் எனக்கு இரண்டு கால்களிலும் அடிபட்டுவிட்டது. இடது காலில் எலும்பு முறிவு ஏற்பட்டது. நான் அங்கேயே மயக்கமாகிவிட்டேன். மறுநாள் தான் என் மனைவி விபத்தில் இறந்துவிட்ட விபரம் எனக்கு தெரியும். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**2.** 10.11.2025 ம் தேதி விபத்து ஏற்பட்டதாக போலிசார் விசாரிக்கும் போது சொன்னேனா என்றால் சொன்னேன். என்னை விசாரித்த போலிஸ் அதிகாரியின் பெயர் மற்றும் பதிவி எனக்கு தெரியாது. விபத்து நடந்த இடத்தில் உள்ள பாரத் பெட்ரோல் பங்கிற்கு எதிரே ஒரு U Turn உள்ளது என்றால் சரிதான். சாலையில் இருசக்கர வாகனங்கள் செல்வதற்கு என்று மிதமான வேகத்தில் செல்வதற்கும் வாகனங்களை முந்தி செல்வதற்கும் மூன்று பகுதிகள் இருக்கும் என்றால் சரிதான். விபத்து நடந்த உடனேயே நான் மயக்கம் அடைந்துவிட்டேன். ஆம்புலன்ஸ் வந்தது கூட எனக்கு தெரியாது. நான் முன்பக்கம் பார்த்து வாகனத்தை ஓட்டி சென்றால் பின்னால் எனக்கு என்ன வாகனம் வந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். விபத்தை ஏற்படுத்திய காரை யார் ஓட்டியது என்று எனக்கு தெரியாது. நான் என்னுடைய இருசக்கர வாகனத்தை சாலையின் இடதுபுறத்தில் இருந்து மைய பகுதியில் ஓட்டி வந்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. வழக்கில்

இறந்து போன என் மனைவிக்கு இழப்பீடு பெற வேண்டும் என்பதற்காக என் மகன் மூலம் பொய்யான புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 192/2026

Miscellaneous :

Sessions : PW -3

Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | மணிகண்டன் |
| Father / Husband Name | தனசேகர் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 18. 06.2026

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது மேலவளம்பேட்டையில் வசித்து சவுண்டு சர்வீஸ் தொழில் செய்து வருகிறேன். 10.11.2025ம் தேதி மதியம் சுமார் 03.00 மணியளவில் நான் நியூரிவர் பள்ளிக்கு அருகே ஒரு சாரத்தை பிரித்து கொண்டிருந்தோம். அப்போது ஆலடிப்பட்டியான் டீ கடை அருகே விபத்து ஏற்பட்ட சத்தம் கேட்டது. நான் ஓடி சென்று பார்த்தேன் அப்போது முகம்மது ஷெரிப்பின் அப்பாவும் அம்மாவும் பிளாட்டினா இருசக்கர வாகனத்தில் சென்றுள்ளார்கள். அவர்கள் சென்ற இருசக்கர வாகனத்தின் மீது ஸ்கார்பியோ கார் மோதி விபத்து ஏற்பட்டுள்ளது. நான் சென்று பார்த்த போது காரின் ஓட்டுநர் அங்கு இல்லை. ஆனால் ஸ்கார்பியோ காரின் முன் பக்கம் பிளாட்டினா பைக் மாட்டி கொண்டிருந்தது. உடனடியாக ஆம்புலன்ஸ் மூலம் ஷெரிப்பின் அப்பாவை செங்கல்பட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துவிட்டு அவரது அம்மாவை மதுராந்தகம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். ஆஜர் எதிரி தான் விபத்து ஏற்படுத்திய காரை ஓட்டிய நபர். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

2. விபத்தில் இறந்து போன மெகருன்பி என்பவரை எனக்கு தெரியும். விபத்து நடந்த சத்தம் கேட்டுதான் நான் சென்றேன் என்றால் சரிதான். யாருடைய கவனக்குறைவால் விபத்து நடந்தது என்று எனக்கு தெரியாது. நியூரிவர் பள்ளியில் இருந்து கல்லாறு பிரிடட்ஜ் வரை எவ்வளவு பேனர் வைத்திருப்பார்கள் என்றால் ஒரு பெரிய பேனர் இருந்தது. பின்னர் ஒரு சில சிறிய பேனர்கள் இருந்தது. அவைகள் அனைத்தும் அரசியல் கட்சியால் வைக்கபட்டது என்றாலும் நியூரிவர் பள்ளியால் வைக்கப்படவில்லை என்றாலும் சரிதான். கல்லாறு பிரிட்ஜ்க்கு முன்பாக கருங்குழி செல்லும் சாலை உள்ளது என்றால் சரிதான். பேனர் கழட்டும் வேலையில் நாங்கள் 5 பேர் ஈடுபட்டிருந்தோம். விபத்து நடந்த 10 நிமிடத்தில் போலிசார் அங்கு

வந்துவிட்டார்கள். அப்போது போலிஸ் என்னை விசாரித்தார்களா என்றால் என்னுடைய பெயர் முகவரியை கேட்டு தெரிந்துகொண்டார்கள்.

3. நான் சவுண்டு சர்வீஸ் வேலை செய்யும் விவரத்தையும் காரின் ஓட்டுநர் இறங்கி ஓடிவிட்டார் என்பதையும் போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். நான் சம்பவ இடத்திலேயே இல்லை என்றாலும் நான் சொல்வது போல் அரசியல் பேனர் எதுவும் இல்லை என்றாலும் விபத்தில் இறந்து போன நபர் எனக்கு தெரிந்த நபர் என்பதால் அவருக்கு இழப்பீடு பெற்று தரவேண்டும் என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 192/2026

Miscellaneous :

Sessions : PW –4

Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | லியாகத்அலி |
| Father / Husband Name | சுலைமான் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 18. 06.2026

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது மேலவளம்பேட்டையில் வசித்து செல்போன் ரிசார்ஜ் கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். சாட்சி ரோஷன் ஜமால் என்பவரை தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வைமகசரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது தான்.**(பார்வைமகசரில் உள்ள அசா4 ன் முதல் கையொப்பம் அசாஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 10.11.2025 ம் தேதி மதியம் 03.00 மணியளவில் ஆலடிப்பட்டியான் டீ கடைக்கு அருகே அப்துல் முனாப் மற்றும் அவரது மனைவி இருசக்கர வாகனத்தில் செல்லும் போது பின்னால் வந்த கார் மோதி விபத்து ஏற்பட்டது. 11.11.2025 ம் தேதி காலையில் நான் டீ கடைக்கு சென்ற போது போலிசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து விசாரணை செய்தார்கள். அதற்கு நான் சாட்சியாக இருந்தேன். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

2. சம்பவ இடம் எனக்கு பரிட்சையமான இடம் என்றால் சரிதான். 11.11.2025 அன்று எங்கு வைத்து கையொப்பம் செய்தேன் என்றால் ஆலடிப்பட்டியான் டீ கடைக்கு எதிரே வைத்து கையொப்பம் செய்தேன். நான் கையொப்பம் செய்த ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்றால் எனக்கு தெரியுமா என்றால் வரைபடம் வரைந்திருந்தார்கள் என்ன எழுதியிருந்தார்கள் என்று எனக்கு தெரியவில்லை. கையொப்பத்தை காலை சுமார் 10.30 மணியளவில் போட்டிருப்பேன். நான் சம்பவயிடத்திலேயே இல்லை என்றாலும் இறந்த நபர் எனக்கு தெரிந்த நபர் என்பதால் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 192/2026

Miscellaneous :

Sessions : PW -5

Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| Name | தமீம்அன்சாரி |
|---|---|
| Father / Husband Name | முகம்மது யூசப் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 18. 06.2026

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது கருங்குழியில் வசித்து டெய்லர் வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்து போன மெகருன்பி என்பவர் என்னுடைய அண்ணி. 10.11.2025 ம் தேதி மாலை 03.00 மணியளவில் என்னுடைய அண்ணனும் அண்ணியும் இருசக்கர வாகனத்தில் கருங்குழியில் இருந்து மதுராந்தகம் வரும் போது ஆலடிப்பட்டியான் காபி கடை அருகே என் அண்ணனின் வண்டிக்கு பின்னால் வந்த கார பின்புறமாக வந்து மோதியதில் என் அண்ணி முன்னால் விழுந்து அங்கேயே இறந்துவிட்டதாக எனக்கு தகவல் சொன்னார்கள். நான் மதுராந்தகம் அரசு மருத்துவமனைக்கு வந்து பார்த்த போது என் அண்ணிக்கு தலை கை கால்களில் அடிப்பட்டு இறந்திருந்தார். அவரது பிரேதத்தின் மீது போலிசார் விசாரணை செய்தார்கள். அதற்கு நான் சாட்சியாக இருந்தேன். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

2. விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். கேள்விபட்டு தான் சென்ற பார்த்தேன்.